# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***
***Spl. S. C. NO. 132/2024***

Deposition of Witness for Prosecution :: **P.W.4**

| | | |
|---|---|---|
| பெயர் | – | சங்கரராகவன் |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 23rd day of March 2026.**

(Both accused present. )
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 2018 ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். நான் திருநெல்வேலி தாலுகா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 27.09.2014 ம் தேதி 10 மணிக்கு நானும், தலைமை காவலர் 1104 செல்வம், காவலர் 964 மகேஷ், காவலர் 1556 கணேசன் ஆகியோர் சகிதம் கீழப்பாட்டம் ஆற்றங்கரையில் மணல் திருட்டு சம்பந்தமாக தகவல் கிடைத்ததின் பேரில் நாங்கள் ரோந்து செய்து வந்தபோது நொச்சிகுளத்தை சேர்ந்த மாடசாமி மகன் முத்துபாண்டி, கீழப்பாட்டத்தை சேர்ந்த முருகையா பாண்டியன் மகன் நடராஜனும் எந்த அனுமதி சீட்டும் இல்லாமல்

கீழப்பாட்டம் வடகிழக்கே தாமிரபரணி ஆற்றுப்படுகையில் மணல் அள்ளிக் கொண்டு வரும்போது தடுத்து நிறுத்தியபோது எங்களைக் கண்டவுடன் வண்டியை நிறுத்திவிட்டு முட்புதருக்குள் ஓடிவிட்டார்கள். அந்த இடத்தில் நாங்கள் லாரியை பரிசோதனை செய்தபோது சுமார் 1 யூனிட் ஆற்று மணல் இருந்தது. அதன் மதிப்பு ரூ.3000/-. ஆற்றுப்படுகையில் செல்லும்போது ஆற்றங்கரையை சேதப்படுத்தியதாகவும், பொதுமக்களுக்கு குந்தகம் விளைவிப்பதாகவும் உள்ள குற்றத்திற்காக வண்டியை மணலுடன் அத்தாட்சியில் கைப்பற்றி திருநெல்வேலி தாலுகா காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் மாரிசெல்வி என்பவரிடம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

எங்களுக்கு பாக்கெட் நோட்புக் உண்டு. அதில் நாங்கள் அன்றாட பணிகள் குறித்து குறித்து வைப்போம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நாங்கள் செய்த பணியை அதில் குறித்து வைத்துள்ளோம். அதை நாங்கள் ஆய்வாளரிடம் ஒப்படைத்தோம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பொதுவாக மணல் அள்ளச் செல்லும் போது மண்வெட்டி, சட்டி ஆகியவை வண்டியில் இருக்கும் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் அது போன்ற பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்பதால் தான் மேற்படி பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் காவல்நிலைய பொதுநாட்குறிப்பில் யார் யாருக்கு என்னென்ன பணி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற விவரம் இருக்கும் என்றால் சரிதான். அதை பார்வையிட்டால் அன்றையதினம் யார் யாருக்கு என்ன பணி

ஒதுக்கப்பட்டது என்று தெரிய வரும் என்றால் சரிதான். அன்றையதினம் நாங்கள் எங்கள் சொந்த வாகனத்தில் ரோந்து பணிக்கு சென்றோம். நான் அவ்வாறு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. யார் மூலம் ரகசிய தகவல் கிடைத்தது என்றால் உதவி ஆய்வாளர் சொன்னதின் பேரில் தான் நாங்கள் சென்றோம். உதவி ஆய்வாளர் சொல்லி ரோந்து பணிக்கு சென்றதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. நாங்கள் ரோந்து பணிக்கு சென்ற இடத்திற்கு விஏஓ, தலையாரி உண்டு. அவர்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை. நான் சொன்ன நாள் தேதியில் நானும், காவலர்களுடன் ரோந்து பணிக்கு சென்றதாக சொல்வதும், எதிரிகள் வாகனத்தை நிறுத்திவிட்டு முட்புதருக்குள் ஓடிவிட்டதாக சொல்வதும், அந்த வாகனத்தில் 1 யூனிட் மணல் இருந்ததாக சொல்வதும், அதன் மதிப்பு ரூ.3000/- என்று சொல்வதும், ஆற்றங்கரையை சேதப்படுத்தியதாக சொல்வதும், வாகனத்தை கைப்பற்றியதாக சொல்வதும் உண்மையில்லை என்றால் சரியல்ல. வீட்டில் இருந்த வாகனத்தை எடுத்து சென்று பொய்யாக இந்த வழக்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் எந்தவித சம்பந்தம் இல்லை என்றும், உயரதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றும், நான் காவல்துறை பணியில் இருந்ததால் காவல்துறைக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Uploaded on 23.03.2026